# கடற்கரை கவியரங்கு– 649

நாள்: **04-05-2025**

## துயர்நீங்கி வாழ்வோம்!

இன்பமும் துன்பமும் இயன்நிலை யென்றே;
எளிதாய் மனமதும் ஏற்றுக் கொண்டால்,
துன்பமில்லை துயரமில்லை தோல்வியுமில்லை!
வன்மம் சூழ்ந்திடும் அந்த நிலையதும் இல்லை!

துன்பம் அறியாது தொடர்ந்திடும் வாழ்வில்,
இன்பமாய் மனமது இறக்கையோடு எழும்!
இன்னல் இல்லாத நிலையது வந்தால்,
கண்களும் மூடி அந்தக் காட்சியில் மகிழும்!

கண்மலர் நோகும் காலங்கள் இல்லை!
உண்மையின் உரைகல்லாய் மனமும் திகழ;
மண்ணின் வாழ்வில் மன்னிய அறங்களை,
எந்நாளும் காத்திடும் இயல்புடன் திகழ்வோம்!

உள்ளம் உவந்து உலகியல் வெல்லும்!
கள்ளம் இல்லா அந்தக் குழந்தை போலே,
துள்ளியாடி துயர்கள் நீக்கியே மகிழும்!
பள்ளமும் மேடும் பார்வை மட்டும் அறிந்திட,

வள்ளலாய் நிறைந்தே மனமது அளிக்கும்,
வளமிகு சொற்களில், இன்பமே தோயும்!
தளம்கொண்ட வாழ்வின் தன்மை புரிய,
உளமது மகிழ்ந்தால், உலகின் இணையேது?

களமின்றி வென்ற காட்சியில் மனமோ,
கரங்கோத்து மகிழும் ஒவ்வொரு நிலையிலும்!
கனிவுடன் வாழ்வை அமைத்து கொள்ள,
இன்பமும் துன்பமும் இயலென்றே அறிவோம்!

**- கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**

03-05-2025 (இரவு 11-15)